[1972 ஆகஸ்டு 9

அனைத்திலும் உள்ள ஊர்ப்பெயர் பலகைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளன.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினாக்கள் முடிவடைந்தன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

1. வினாக்களுக்கு விடையளிப்பது குறித்து

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இன்றையதினம் வந்துள்ள கேள்விகளில் 3 கேள்விகள் வேளாண்மைத் துறை அமைச்சர் பதிலளிக்க வேண்டியவையாகும். இந்தக் கேள்விகள் பட்டியலில் இருந்தும் கூட அமைச்சர் வராமலிருப்பது உள்ளபடியே சபைக்கு மதிப்பளிப்பதாக இல்லை. அவருக்கு உடல் நலமில்லை யென்றால், முதலில் தெரிவித்திருந்தால் கூட நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சருக்கு உடல் நலக்குறைவு இன்றைக்கு ஏற்படும் என்று நேற்று முந்தாநாள் தெரியாது. அவர் வராததற்கு உடல் நலக் குறைவுதான் காரணம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இப்படிப் பல தடவை நடப்பதால் இன்றைய தினம் சொன்னேன்.

4. அறிவிப்புகள்.

(1) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு இரு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களால் மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு விதாச்சார பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம் இரு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டியுள்ளது என்று நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கீழ்க்கண்ட நாட்கள், நேரடி வாக்குப் பதிவு முறை மூலம் தேர்தல் நடைபெறும் நாட்களென முடிவு செய்யப் பட்டுள்ளன.